செய்தி வெளியீட்டு எண்–254 நாள்– 22–3–2010

# செய்தி வெளியீடு

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் குடியரசுத் தலைவரின் தொல்காப்பியர் விருது, 15 இளம் அறிஞர் விருதுகளுக்கான 20 இலட்சம் ரூபாய் பொற்கிழிகள்!

## விருதாளர்களுக்கு 28.3.2010 அன்று சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் கலைஞர் வழங்குகிறார்!

உலக அளவிலும், இந்திய அளவிலும் புகழுடன் சிறந்து விளங்கும் தமிழறிஞர் பெருமக்களுக்குத் தொல்காப்பியர் பெயரிலும், அய்யன் திருவள்ளுவர் பெயரிலும் விருதுகள் வழங்கப்பட வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் அரசும் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியதன் பயனாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வாயிலாக இந்திய அளவில் சிறந்து விளங்கும் அறிஞர் ஒருவர்க்கு 5 இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன் தொல்காப்பியர் விருதும், அயல்நாட்டு அறிஞர் ஒருவர்க்கும், அயல்நாடுவாழ் இந்தியர் ஒருவருக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் பொற்கிழி கொண்ட குறள்பீட விருதும், இளம் தமிழறிஞர்களிடையே தமிழ் ஆராய்ச்சித் திறனை ஊக்கி வளர்த்திடும் நோக்கில் தலா ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன் 5 இளம் அறிஞர் விருதுகளும் குடியரசுத் தலைவர் விருதுகளாக ஆண்டுதோறும் வழங்கப்படுமென மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, 2005–2006 முதல் மூன்றாண்டுகளுக்கான விருதுகளைப் பெறும் அறிஞர் பெருமக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் பெயர்கள் 21.10.2009 அன்று மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டன.

அப்பெருமக்களுக்குரிய விருதுகள் வழங்கும் விழா குடியரசுத் தலைவர் மாளிகையில் விரைவில் நிகழவிருக்கிறது. இந்நிலையில், விருதாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய பொற்கிழிகளை அவர்களுக்கு வழங்கி விடலாம் என

மத்திய அரசு – மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையில்;

குடியரசுத் தலைவரின் தொல்காப்பிய விருது பெறவுள்ள பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் பொற்கிழியையும்;

2005–2006ஆம் ஆண்டிற்கான இளம் அறிஞர் விருது பெறவுள்ள முனைவர் இரா. அறவேந்தன் (தாமோதரன்), முனைவர் ய. மணிகண்டன், முனைவர் சி. கலைமகள், முனைவர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர், முனைவர் கே. பழனிவேலு;

2006–2007ஆம் ஆண்டிற்கான இளம் அறிஞர் விருது பெறவுள்ள முனைவர் சு. சந்திரா, முனைவர் அரங்க. பாரி, முனைவர் மு. இளங்கோவன், முனைவர் மா. பவானி, முனைவர் இரா. கலைவாணி;

2007–2008 ஆம் ஆண்டிற்கான இளம் அறிஞர் விருது பெறவுள்ள முனைவர் அ.செல்வராசு, முனைவர் ப. வேல்முருகன், முனைவர் ஆ. மணவழகன், திரு. ச. சந்திரசேகரன், முனைவர் சா. சைமன் ஜான்

ஆகிய 15 அறிஞர்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொற்கிழிகளையும் என மொத்தம் 20 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொற்கிழிகளை 28.3.2010 அன்று காலை 11.00 மணி அளவில் சென்னை, நுங்கம்பாக்கம், தாஜ் கொரமண்டலில் நடைபெறவிருக்கும் விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்குவார்கள்.

குடியரசுத் தலைவரின் குறள்பீட விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள அமெரிக்க நாட்டிலுள்ள தமிழறிஞர் பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் அவர்களுக்குரிய 5 இலட்சம் ரூபாய் பொற்கிழி பின்னர் வழங்கப்படும்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.